**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238 /2023**

**Deposition of P.W.** 1

Name : திரு. ரமேஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது பரசேரியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் 06.01.2023ம் தேதி திருவட்டார் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது காலை 07.00மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. டேவிட் ராஜ். தலைமைக்காவலர் திரு. பிரபுதாஸ், மற்றும் சைலின் ஜெபசுபின் ஆகியவருடன் குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு சாலையில் வாகன தணிக்கை செய்த போது TN 75 AC 6564 என்ற சிகப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த குட்டக்குழி ரோஸ்மணி மகன் ரமேஷ்மணி என்பவரை தடுத்து நிறுத்தி பரிசோதிக்க அவர் வந்த இருசக்கர வாகன்ததின் பின்னால் சீட்டின் மீது கட்டி வைக்கப்பட்டிரந்து இரண்டு

வெள்ளை கலர் சாக்குமூட்டைகளில் அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் டெபாகோ என்று எழுதப்பட்ட ஒரு பாக்கெட்டில் 15 பவுச்சுகள் கொண்ட 120 பாக்கெட்டுகள் கணேஷ் புகையிலை காணப்பட்டது. எதிரியை விசாரிக்க தான் தனது வீட்டிலிருந்து மேற்படி பொருட்களை கடைகளுக்கு விற்பனைக்கு கொடுக்க கொண்டு செல்வதாகவும், புகையிலை விற்பனை செய்த பணம் ரூ.2,97,550/– பாக்கெட்டில் வைத்து இருப்பதாகவும் கூறினார். மேற்படி அரசால் தடை செய்யப்பட்ட புகையிலையை கொண்டு செல்ல எவ்வித அரசு அனுமதியும் இல்லாத காரணத்தால் மேற்படி சாக்குமூட்டைகளில் இருந்த புகையிலை இருசக்கர வாகனம் மற்றும் பணத்தை மேல்நடவடிக்கைக்காக அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அத்தாட்சியில் கையொப்பம் செய்ய வெளி நபர்கள் யாரும் முன்வராததால் போலீசார் சாட்சிகளாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். 08.30 மணிக்கு நிலையம் வந்து அத்தாட்சியின் தன்மை படி நிலைய குற்ற எண்.5/2023 பிரிவுகள் 273, 328 இ.த.ச 24(1) CO TP Act மற்றும் பிரிவு 77 இளஞ்சிறார் நீதிசட்ட படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடம் காவல்நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவு இருக்குமா என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ நாளன்றே காவல் ஆய்வாளர் எனனை விசாரித்தார். எனக்கு பாக்கெட் டயரி மற்றும் பொதுநாட் குறிப்பு

உண்டு. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரத்தை பொதுநாட் குறிப்பில் பதிவு செய்தேன். ரோந்திற்கு இருசக்கர வாகனத்தில் போனோம். எந்த வாகனம் என்று தற்போது ஞாபகமில்லை. தனியார் இருசக்கர வாகனத்தில் போனோம். வழக்கு தொடர்பாக எனக்கு ரகசிய தகவல் கிடைத்தது. ரகசிய தகவலை யார் கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை. ரகசிய தகவலை உயரதிகாரிக்கு சொல்லவில்லை. சம்பவ இடத்தில் ½ மணி நேரம் வாகன தணிக்கை செய்தோம். சம்பவ இடம் நிறைய வாகனங்கள் மற்றும் ஆட்கள் செல்லக்கூடிய இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கடைகளும், வீடுகளும் உள்ளன என்றால் சரிதான். சாக்கு பையின் அளவை அளக்கவில்லை. 1வது எதிரியிடமிருந்து சாக்கு பையை கைப்பற்றாததால் எனக்கு அதன் அளவு தெரியவில்லை என்றால் சரியல்ல. 2 வெள்ளை நிற சாக்குகளில் தலா 60 பாக்கெட்டுகளாக இருந்தது. எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. யாருக்கு எந்த இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதாக என்னிடம் கூறவில்லை. எதிரியின் வீடு சம்பவத்திற்கு முன்னர் எனக்குத் தெரியாது. சம்பவத்திற்கு பின்னர் ரகசிய தகவலாளி சொல்லி தான் தெரியும். எதிரியின் வீட்டிற்கு நான் செல்லவில்லை. அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்த இடத்தில் தேதி குறிப்பிடவில்லை. எதிரியை சோதனை செய்ய அவருக்கு குறிப்பாணை எதுவும் கொடுக்கவில்லை. சம்பவ இடத்தில் ஆட்கள் இருந்தார்கள். அத்தாட்சியில் கையொப்பம் செய்ய முன்வரவில்லை. அத்தாட்சியில் கையொப்பம் செய்ய வராதவர்கள் மீது குற்ற நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எவ்வித சம்பவமும் நடைபெறாததால் தனிப்பட்ட சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல.

போலீசார் சாட்சிகளை வைத்து பொய்யான அத்தாட்சி தயாரித்தேன் என்றால் சரியல்ல. நான் எவ்வித படிவம் 95 தயார் செய்யவில்லை. நான் சொன்னது போல், 1வது எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி வீட்டில் கண் அறுவை சிகிச்சைக்காக வைத்திருந்த பணத்தை விட்டிலிருந்து கைப்பற்றினேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியிடமிருந்து எவ்வித வாகனமும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சமபவ இடத்தில் 2வது எதிரி இல்லை. 2வது எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றபடவில்லை. சம்பவ இடத்தில் நடைபெற்ற விஷயத்தை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன். கணேஷ் புகையிலையை 2வது எதிரி, 1வது எதிரிக்கு கொடுத்ததாக 1வது எதிரி என்னிடம் எதுவும் கூறவில்லை. ஆய்வாளரிடம் நான் அவ்வாறு கூறவில்லை. 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.** 2

Name : திரு.டேவிட் ராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றிய போது 06.01.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ் என்பவருடன் நானும், தலைமைக்காவலர் திரு. சைலின் ஜெபசுபின், பிரபு தாஸ் ஆகியவர்கள் குட்டக்குழி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகாமையில் உள்ள சாலையில் வாகன சோதனை செய்த போது TN 75 AC 6564 சிகப்பு நிற பல்சர் வாகனத்தில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ரமேஷ்மணி வந்தார். அவரை சோதனை செய்தபோது வாகனத்தில் வெள்ளை நிற சாக்கு பைகளில் இரண்டு மூடை குட்கா 120 பாக்கெட்டுகள் காணப்பட்டன. அரசு அனுமதியின்றி கடைகளுக்கு

விற்பனை செய்ய கொண்டு சென்றது தெரிய வந்தது. குட்கா விற்பனை செய்த பணம் ரூ.2,97,550/- ஐ கைப்பற்றி அத்தாட்சியில் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் நானும், பிரபுதாஸ் என்பவரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம். கைப்பற்றப்பட்ட பொருட்களையும், எதிரியையும் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ நாளில் நான் காலை 06.00 மணியிலிருந்து பணியில் இருந்தேன். பொதுவாக 08.00 மணிக்கு பணிக்கு வருவேன். சம்பவ நாளில் குட்டக்குழியில் தான் முதலில் தணிக்கை செய்தோம். சார்பு ஆய்வாளர் தான் தணிக்கைக்கு கூப்பிட்டார். எந்த தகவலின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் என்னை கூப்பிட்டார் என்று எனக்குத் தெரியாது. அன்றைய தினம் எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்று ஞாபகமில்லை. ½ மணிக்கு மேலாக தணிக்கை செய்தோம். இருசக்கர வாகனத்தில் ரோந்திற்கு போனோம். எதிரி மூன்று முக்கு சாலையில் எந்த திசையிலிருந்து வந்தார் என்றால் ஞாபகமில்லை. நாங்கள் எந்த திசையில் நின்று சோதனை செய்தோம் என்று ஞாபகமில்லை. சோதனை செய்த போது ஊர்மக்களும் அ.சா.1ன் உறவினர்களும் வந்தார்கள் என்றால் சரிதான். எதிரியின் ஊரை சார்ந்தவர்கள் வந்தார்கள் என்றால் வந்தார்கள். பணத்தை எதிரியின் வாகனத்தில் இருந்து எடுத்தேன். நான் சொன்னதுபோல் பணத்தை எதிரியின் வாகனத்திலிருந்து எடுக்கவில்லை என்றும், கண் அறுவை சிகிச்சைக்காக எதிரி வைத்திருந்த பணத்தை வீட்டிலிருந்து எடுத்தோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து 2,

3 கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். எந்த வகையான பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. நான் கையொப்பம் போட்ட பேப்பர்களில் எல்லாம் உடன் இருந்த சாட்சி பிரபுதாசும் கையொப்பம் செய்தார். எதிரி எங்களிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை. சம்பவ இடத்தின்அருகே இருந்தவர்களை சாட்சிக்கு அழைக்கவில்லை. 1வது எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. உயரதிகாரிகள் வேண்டுகோள் படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில் 2வது எதிரி இல்லை என்றால் சரிதான். 2வது எதிரியிடமிருந்து எவ்வித சான்று பொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நடைபெற்ற விபரங்களை காவல் ஆய்வாளரிடம் கூறினேன் என்றால் சரிதான். 2வது எதிரி, 1வது எதிரிக்கு சான்று பொருளை கொடுத்ததாக எங்களிடம் 1வது எதிரி வாக்குமூலம் கொடுக்கவில்லை. 2வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.** 3

Name : திரு.பிரபுதாஸ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 28.01.2026

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது குலசேகரம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது 06.01.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. டேவிட்ராஜ், தலைமைக்காவலர் திரு. சைவின் ஜெப சுபின் ஆகியவர்கள் குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் உள்ள சாலையில் வாகன தணிக்கை செய்தோம். அப்போது TN 75 AC 6564 என்ற எண் கொண்ட சிகப்பு நிற பல்சர் வாகனத்தில் வந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த ரமேஷ்மணி த/பெ. ரோஸ்மணி என்பவரைநிறுத்தி விசாரிக்க அவரதுஇருசக்கர வாகனத்திற்கு பின்னால் வெள்ளை நிற சாக்கு பைகளில் அரசால் தடை

செய்யப்பட்ட கணேஷ் புகையிலை 15 பவுச்சுடைய 120 பாக்கெட்டுகள் இருந்தன. அதை விற்பனை செய்வதற்காக கொண்டு சென்றதாக கூறினார். அவரிடமிருந்து ரூ.2,97,550/-மும் கைப்பற்றப்பட்டு நிலையம் கொண்டுவரப்பட்டு அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கையொப்பம் செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரியினுடைய பெயர், விபரம் உதவி ஆய்வாளர் சொல்லி எனக்குத் தெரியும். அன்று ஆற்றூரில் வாகன தணிக்கையும் செய்தோம். அதன் பிறகு குட்டக்குழி வந்தோம். குட்டக்குழி ஆரம்ப சுகாதாரம் அருகே வாகன தணிக்கை செய்தோம். சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவல் படி தணிக்கைக்கு போனோம். நான்கு சக்கர டிரக்கர் வண்டியில் சோதனைக்கு போனோம். நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் சோதனைக்கு போனோம். குட்டக்குழி பகுதியில் ஆட்கள் நடமாட்டமும் உள்ள பகுதி தான். சுமார் 50 வாகனங்களை தணிக்கை செய்திருப்போம். எதிரி கிழக்கிலிருந்து – மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார். தணிக்கை செய்த சாலை கிழக்கிலிருந்து – மேற்கே செல்லும் சாலை ஆகும். கையொப்பம் செய்ய தனி ஆட்களை கூப்பிடும் போது தனி ஆட்கள் யாரும் இல்லை. எதிரி இருசக்கர வாகனத்தின் டேங்கிற்குள் பணத்தை வைத்திருந்தார். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில், எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்தவிதமான பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்றும்சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**.

சம்பவ இடத்தில் 2வது எதிரி இல்லை என்றால் சரிதான். 2வது எதிரியிடமிருந்து எவ்வித சான்று பொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நடைபெற்ற விபரங்களை காவல் ஆய்வாளரிடம் கூறினேன் என்றால் சரிதான். 2வது எதிரி, 1வது எதிரிக்கு சான்று பொருளை கொடுத்ததாக எங்களிடம் 1வது எதிரி வாக்குமூலம் கொடுக்கவில்லை. 2வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.